**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்**

2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 08- ம் நாள் திரு.S.இராமச்சந்திரன், B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதிசெய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| O.S.No. | : 40/2018 | வா.சா. | : 1 |
| பெயர் | : திரு. சந்திரசேகரன் | | |
| க/பெ. | : திரு. அருணாச்சலம் | | |
| கிராமம் | : | சாதி | : |
| தாலுக்கா | : | சமயம் | : |
| வயது | : 46 | தொழில் | : |

**முதல் விசாரணை :**

நான் இந்த வழக்கில் 3 ம் வாதி. முதல் விசாரணைக்கான எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாகத் தாக்கல் செய்கிறேன். மேற்படி பிரமாண வாக்குமூலத்தை எனது முதல்விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். 09-05-1928 தேதிய பாட்டக்காள் பெயரிலுள்ள கிரையப்பத்திரத்திர எண். 643/1928-ன் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 ஆகவும், 09-05-1928 தேதிய பாட்டக்காள் பெயரிலுள்ள கிரையப்பத்திர எண். 644/1928-ன் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2 ஆகவும், 06-12-1995 தேதியில் 1, 2 பிரதிவாதிகளின் தகப்பனார் 3 ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3 ஆகவும், 29-01-1997 தேதியில் 1, 2 பிரதிவாதிகளின் தகப்பனார் அவர்களுக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4 ஆகவும்,

கோபிசெட்டிபாளையம் வருவாய் வட்டாட்சியர் வழங்கிய அனுபவ சான்று அசல் வா.சா.ஆ.5 ஆகவும், 17-08-2011 தேதியில் எனது தகப்பனார் 1ம் வாதி எனக்கும், எனது சகோதரன் 2ம் வாதிக்கும் எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.6 ஆகவும், எனது பெயரிலும், எனது சகோதரன் 2ம் வாதி பெயரிலும் உள்ள பட்டா அசல் வா.சா.ஆ.7 ஆகவும், 16-04-2018 தேதியில் கோபிசெட்டிபாளையம் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் ப.மு.6569/2016 ல் பிறப்பித்த உத்தரவு அசல் வா.சா.ஆ.8 ஆகவும், கிஸ்து ரசீதுகள் (எண்ணிக்கை 5) வா.சா.ஆ.9 ஆகவும், வீட்டு வரி ரசீதுகள் (எண்ணிக்கை 40 வா.சா.ஆ.10 ஆகவும், எனது தகப்பனார் பெயரில் குடிநீர் இணைப்பு டெபாசிட் செய்ததற்கான ரசீது வா.சா.ஆ.11 ஆகவும், மின் கட்டண ரசீதுகள் (எண்ணிக்கை 55) வா.சா.ஆ.12 ஆகவும் குறியீடு செய்யவேண்டுகிறேன். தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**